**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**STC.No. 1869/2024**
**Prosecution Witness : 6**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : குப்புச்சாமி | **Caste** | : |
| **Father's Name** | : ராமன் | **Calling** | : கூலி வேலை |
| **Village** | : அகஸ்தியர்புரம் | **Religion** | : |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : 50 |
| | | **Dated** | : 04.02.2025 |

**04.02.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 2 திரு. **குப்புச்சாமி** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா.6 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜரில்லை. 355 BNSS Petition filed and allowed.**

1. நான் திண்டுக்கல் அகஸ்தியர்புரத்தில் குடியிருந்து கூலிவேலை செய்து வருகிறேன். கடந்த 2 வருடத்திற்கு முன்பு திண்டுக்கல் பேருந்து நிலையத்தில் இருந்து காலை சுமார் 05.30 மணிக்கு அகஸ்தியர்புரத்திற்கு அரசு பேருந்தில் ஏறி சென்று கொண்டிருந்தபோது 18 வளைவில் பேருந்தை டிரைவர் திருப்பும்போது பேருந்து பள்ளத்தில் கவிழ்ந்துவிட்டது. டிரைவர் புதிய டிரைவர் என்பதால் அவர் பள்ளத்தில் விட்டுவிட்டார். இந்த சம்பவத்தில் எனக்கு வலது பக்க காதிலும், தலையிலும் காயம்பட்டது. வலது பக்க கை ஒடிந்துவிட்டது. வலது பக்க கையில் எனக்கு தற்போது வரை சரியாகவில்லை. என்னுடன் பயனித்த சுமார் 20 நபர்களுக்கு காயம் பட்டது. காயம்பட்ட நபர்களை திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்சில் அழைத்துவந்தார்கள். பேருந்தை ஓட்டிய டிரைவரை நான் பார்த்தால் அடையாளம் காட்டமுடியும். அவர் இன்று நீதிமன்றத்திற்கு வரவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் காலை 5.00 மணி என்றால் சரிதான். நான் பயணம் செய்த பேருந்தில் சுமார் 50 பேருக்கு மேல் பயணம் செய்திருப்பார்கள் என்றால் சரிதான். நான் பயணம் செய்ததாக சொல்லப்படும் பேருந்து பெரிய அரசு பேருந்து என்றால் சரிதான். விபத்து நடந்ததாக சொல்லப்படும் ரோடு குறுகலான ரோடு என்றால் சரிதான். 18 வது வளைவு கொண்டை ஊசி வளைவு என்றால் சரிதான். விபத்த நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகே கட்டுமான வேலைகள் நடந்து கொண்டதா என்றால் இல்லை. திண்டுக்கலில் இருந்து சிறுமலை 25 கி.மீ துாரம் இருக்கும் என்றால் சரியல்ல. அதிகமாக இருக்கும். அதில் 15 கி.மீ துாரம் மலைப்பகுதியில் பயணம் செய்யவேண்டும் என்றால் சரிதான். பேருந்தில் சென்று கொண்டிருந்தபோது எதிரே டாடா ஏசிஇ வாகனம் வந்து கொண்டிருந்ததா என்றால் இல்லை. நான் பேருந்தில் பின் இருக்கையில் அமர்ந்து பயணம் செய்தேன் என்றால் சரிதான். நான் பயணம் செய்தது ஜனவரி மாதம் என்பதால் பனிமூட்டம் அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். சிறுமலை காட்டுப்பகுதி என்பதால் காட்டு மாடுகள் நடமாட்டம் அவ்வப்பொழுது இருக்கும் என்றால் சரிதான். சொன்ன தேதியில் சொன்னவிதத்தில் எந்தவிதமான விபத்தும் நடைபெறவில்லை என்றாலும், காலை நேரம் வாகனங்கள் அதிகமாக வருவதை மறைத்து எதிரே வாகனங்கள் வரவில்லை என்று தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியின் கவனக்குறைவாகவும் அஜாக்கிரதையாகவும் இந்த விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** –இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

SOUMYA MATHEW Digitally signed by SOUMYA MATHEW Date: 2025.02.04 11:06:09 +0530

Judicial Magistrate No.I
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**STC.No. 1869/2024**

**Prosecution Witness : 7**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : **கார்த்திக்** | **Caste** | : |
| **Father's Name** | : **ஆண்டிக்காளை** | **Calling** | : **விவசாயம்** |
| **Village** | : **சிறுமலை** | **Religion** | : |
| **Taluk** | : **திண்டுக்கல்** | **Age** | : **29** |
| | | **Dated** | : **04.02.2025** |

**04.02.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 3 திரு. கார்த்திக் ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா.7 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜரில்லை. 355 BNSS Petition filed and allowed.**

1. நான் திண்டுக்கல் சிறுமலையில் குடியிருந்து விவசாயவேலை செய்து வருகிறேன். கடந்த 2 வருடத்திற்கு முன்பு திண்டுக்கலிற்கு சொந்தவேலையாக வந்து பொருட்கள் வாங்கிவிட்டு தென்மலை செல்வதற்காக திண்டுக்கல் பேருந்து நிலையத்தில் இருந்து அரசு பேருந்தில் காலை சுமார் 5.30 மணிக்கு பேருந்தில் ஏறினேன். பேருந்து 18 வது பெண்டில் சென்று கொண்டிருந்தபோது பேருந்து அதிவேகமாக சென்று வலது பக்கத்தில் உள்ள பள்ளத்தில் பேருந்து இறங்கிவிட்டது. அதில் எனக்கு வலது காலில் காயம்பட்டது. நெஞ்சில் காயம்பட்டது. என்னுடன் பயனித்தவர்களுக்கும் தலை, இடுப்பு, கையில் காயம் ஏற்பட்டது. பேருந்தை ஓட்டிய டிரைவரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட இயலும். அவர் இன்று நீதிமன்றத்திற்கு வரவில்லை. என்னுடன் காயம்பட்ட நபர்களையும், என்னையும் திண்டுக்கல் அரசு

மருத்துவமனைக்கு ஆம்புலன்சில் அழைத்துச் சென்றார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் காலை 5.00 மணி என்றால் இல்லை., 6.00 மணி இருக்கும். நான் எதற்காக திண்டுக்கல்லிற்கு வந்தேன் என்றால் காய்கறி வாங்குவதற்காக வந்தேன். சிறுமலையிலிருந்து காய்கறி, பூ போன்ற பொருட்கள் திண்டுக்கல்லிற்கு வரும் என்றால் சரிதான். மலையில் செல்லும்போது எதிரே நிறைய வாகனங்கள் வரும் என்றால் இல்லை. விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடம் குறுகலான ரோடு என்றால் சரிதான். நான் பயணம் செய்தது ஜனவரி மாதம் என்பதால் பனிமூட்டம் அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். பஸ்சில் நான் எங்கு அமர்ந்து பயணம் செய்தேன் என்றால் நான் டிரைவர் சீட்டிற்கு பின்பு 4 சீட் பின்னால் அமர்ந்து பயணம் செய்தேன். சிறுமலை காட்டுப்பகுதி என்பதால் காட்டு மாடுகள் நடமாட்டம் அவ்வப்பொழுது இருக்கும் என்றால் சரிதான். பேருந்தில் என்னுடன் எவ்வளவு நபர்கள் பயணம் செய்தார்கள் என்றால் சுமார் 20 நபர்கள் இருப்பார்கள். அதில் 7,8 நபர்களுக்கு காயம் ஏற்பட்டிருக்கும். சொன்ன தேதியில் சொன்னவிதத்தில் எந்தவிதமான விபத்தும் நடைபெறவில்லை என்றாலும், காலை நேரம் வாகனங்கள் அதிகமாக வருவதை மறைத்து எதிரே வாகனங்கள் வரவில்லை என்று தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியின் கவனக்குறைவாகவும் அஜாக்கிரதையாகவும் இந்த விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –**இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

SOUMYA MATHEW Digitally signed by SOUMYA MATHEW Date: 2025.02.04 11:07:03 +0530

Judicial Magistrate No.I
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**STC.No. 1869/2024**

**Prosecution Witness :8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **பழனியம்மாள்** | **Caste** | : | |
| **Husband's Name** | : | **ஆண்டிக்காளை** | **Calling** | : | **கூலி** |
| **Village** | : | **தென்மலை** | **Religion** | : | |
| **Taluk** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **65** |
| | | | **Dated** | : | **04.02.2025** |

**04.02.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 7 திரு. பழனியம்மாள் ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா.8 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.
**<u>எதிரி ஆஜரில்லை. 355 BNSS Petition filed and allowed.</u>**
1. நான் திண்டுக்கல் தென்மலையில் குடியிருந்து கூலிவேலை செய்து வருகிறேன். கடந்த 2 வருடத்திற்கு முன்பு திண்டுக்கலிற்கு சொந்தவேலையாக வந்து பொருட்கள் வாங்கிவிட்டு தென்மலை செல்வதற்காக திண்டுக்கல் பேருந்து நிலையத்தில் இருந்து அரசு பேருந்தில் காலை சுமார் 5.30 மணிக்கு பேருந்தில் ஏறினேன். மேல் பெண்டில் பேருந்து சென்று கொண்டிருந்தபோது பேருந்து சாய்ந்து விட்டது. அதில் எனக்கு வலது நெற்றியில் காயம்பட்டது. வலது பக்க ஆள்காட்டிவிரல், வலது பக்க இடுப்பு ஆகிய இடங்களில் காயம்பட்டது. நான் அமர்ந்திருந்த சீட்டில் 3 நபர்கள் அமர்ந்திருந்தோம். அவர்களுக்கும் காயம் ஏற்பட்டது. மற்ற நபர்களுக்கும் காயம் ஏற்பட்டது. பேருந்தை ஓட்டிய டிரைவர் புதிய நபர். அவர் இன்று நீதிமன்றத்திற்கு வந்துள்ளாரா என்று எனக்குத் தெரியவில்லை. என்னுடன் காயம்பட்ட நபர்களையும், என்னையும் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்சில்

அழைத்துச் சென்றார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள். தற்போதுவரை எனக்கு இடுப்பில் ஏற்பட்ட காயம் குணமாகவில்லை.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடம் குறுகலான ரோடு என்றால் சரிதான். காலை நேரத்தில் சிறுமலையிலிருந்து காய்கறி, பூ போன்ற பொருட்கள் திண்டுக்கல்லிற்கு வரும் என்றால் சரிதான். நான் பயணம் செய்தது ஜனவரி மாதம் என்பதால் பனிமூட்டம் அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். சிறுமலை காட்டுப்பகுதி என்பதால் காட்டு மாடுகள் நடமாட்டம் அவ்வப்பொழுது இருக்கும் என்றால் சரிதான்.சொன்ன தேதியில் சொன்னவிதத்தில் எந்தவிதமான விபத்தும் நடைபெறவில்லை என்றாலும், காலை நேரம் வாகனங்கள் அதிகமாக வருவதை மறைத்து எதிரே வாகனங்கள் வரவில்லை என்று தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியின் கவனக்குறைவாகவும் அஜாக்கிரதையாகவும் இந்த விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** –இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

SOUMYA MATHEW Digitally signed by SOUMYA MATHEW Date: 2025.02.04 11:07:12 +0530

Judicial Magistrate No.I
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**STC.No. 1869/2024**

**Prosecution Witness :9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | பிச்சையம்மாள் | **Caste** | : | |
| **Husband's Name** | : | சின்னையா | **Calling** | : | கூலிவேலை |
| **Village** | : | சிறுமலை | **Religion** | : | |
| **Taluk** | : | திண்டுக்கல் | **Age** | : | 70 |
| | | | **Dated** | : | **04.02.2025** |

**04.02.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 9 திரு. பிச்சையம்மாள் ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா.9 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.
**எதிரி ஆஜரில்லை. 355 BNSS Petition filed and allowed.**

1. நான் திண்டுக்கல் சிறுமலையில் குடியிருந்து கூலிவேலை செய்து வருகிறேன். கடந்த 2 வருடத்திற்கு முன்பு திண்டுக்கலிற்கு சொந்தவேலையாக வந்து பொருட்கள் வாங்கிவிட்டு தென்மலை செல்வதற்காக திண்டுக்கல் பேருந்து நிலையத்தில் இருந்து அரசு பேருந்தில் காலை சுமார் 5.30 மணிக்கு பேருந்தில் ஏறினேன். 18 வது வளைவில் பேருந்து சென்று கொண்டிருந்தபோது பேருந்து சாய்ந்து விட்டது. ரொம்ப இருட்டாக இருந்தது. அதில் எனக்கு இடது பக்க இடுப்பு மற்றும் இடது பக்க தோள்பட்டை, வலது பக்க இடுப்பு ஆகிய இடங்களில் காயம்பட்டது. என்னுடன் சீட்டில் இருந்த ரமணி என்பவருக்கும் காயம் ஏற்பட்டது. பேருந்தை ஓட்டிய டிரைவர் புதிய நபர். அவர் இன்று நீதிமன்றத்திற்கு வந்துள்ளாரா என்று எனக்குத் தெரியவில்லை. என்னுடன் காயம்பட்ட நபர்களையும், என்னையும் திண்டுக்கல் அரசு

மருத்துவமனைக்கு ஆம்புலன்சில் அழைத்துச் சென்றார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடம் குறுகலான ரோடு என்றால் சரிதான். நான் பயணம் செய்தது ஜனவரி மாதம் என்பதால் பனிமூட்டம் அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். நான் பயணம் செய்யும்போது தூங்கிவிட்டேன் என்றால் சரிதான். நான் தூங்கியதால் விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை** –இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

SOUMYA MATHEW Digitally signed by SOUMYA MATHEW Date: 2025.02.04 11:07:20 +0530

Judicial Magistrate No.I
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**STC.No. 1869/2024**

**Prosecution Witness :10**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | கோபால் | **Caste** | : | |
| **Fathers Name** | : | பழனி | **Calling** | : | டிரைவர் |
| **Village** | : | சிறுமலை | **Religion** | : | |
| **Taluk** | : | திண்டுக்கல் | **Age** | : | 49 |
| | | | **Dated** | : | **04.02.2025** |

**04.02.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 10 திரு. கோபால் ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா.10 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரி ஆஜரில்லை. 355 BNSS Petition filed and allowed.</u>**

1. நான் திண்டுக்கல் சிறுமலையில் குடியிருந்து டிரைவர் வேலை செய்து வருகிறேன். கடந்த 24.01.2023 ம் தேதி காலை 5.15 மணிக்கு திண்டுக்கல் பேருந்து நிலையத்தில் இருந்து அரசு பேருந்தில் சிறுமலைக்கு சென்றேன். பேருந்து 18 வது பெண்டில் சென்று கொண்டிருந்தபோது பேருந்து டிரைவரின் அசால்ட்டாலும், புதிய டிரைவர் என்பதாலும் பனிமூட்டம் இருந்ததாலும் பேருந்து பள்ளத்தில் கவிழ்ந்து விட்டது. அதில் எனக்கு இடது பக்க நெஞ்சு மற்றும் இடுப்பில் காயம்பட்டது. என்னுடன் பயணித்த சிவலிங்கம், வில்லியார், பாஸ்கர் மற்றும் மற்ற பயணிகளுக்கும காயம் ஏற்பட்டது. பேருந்தை ஓட்டிய நபரை பார்த்தால் எனக்கு அடையாளம் காட்ட இயலும் அவர் இன்று நீதிமன்றத்திற்கு வரவில்லை. என்னுடன் காயம்பட்ட நபர்களையும், என்னையும் 108 ஆம்புலன்சில் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடம் குறுகலான ரோடு என்றால் பராவால்லாமல் இருக்கும். நான் பயணம் செய்தது ஜனவரி மாதம் என்பதால் பனிமூட்டம் அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். காலை நேரத்தில் சிறுமலையிலிருந்து காய்கறி, பூ போன்ற பொருட்கள் திண்டுக்கல்லிற்கு வரும் என்றால் சரிதான். சிறுமலை காட்டுப்பகுதி என்பதால் காட்டு மாடுகள் அவ்வப்பொழுது ரோட்டில் நடமாடும் என்றால் சரிதான். சொன்ன தேதியில் சொன்னவிதத்தில் எந்தவிதமான விபத்தும் நடைபெறவில்லை என்றாலும், காலை நேரம் வாகனங்கள் அதிகமாக வருவதை மறைத்து எதிரே வாகனங்கள் வரவில்லை என்று தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியின் கவனக்குறைவாகவும் அஜாக்கிரதையாகவும் இந்த விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** –இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

SOUMYA MATHEW Digitally signed by SOUMYA MATHEW Date: 2025.02.04 11:07:29 +0530

Judicial Magistrate No.I
Dindigul.